தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveerarnaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

**9 வயதுப்பிரிவு**
(01.01.2011 – 31.12.2011 வரையில் பிறந்தோர்)

## ஈழத்தமிழர் எதிர்கொண்ட பேரிடர்கள்

எம்மைச் சுட்ட தோட்டாக்கள் மற்றவரைத் தொட்டிருந்தால் வேரோடு சாய்ந்திருப்பர். நாம் பட்ட துயரெல்லாம் இன்னோர் இனம் பட்டிருந்தால் வேரடி மண்ணோடு மாய்ந்திருப்பர். ஒன்றா, இரண்டா பட்டியலிட்டுச் சொல்ல? எத்தனை இடர்களை எதிர்கொண்டோம்! அத்தனையிலும் மீண்டெழுந்தோம்!

எம்மீது போர் கொண்டு வந்து குண்டுமழை பொழிந்து அழித்தனர். கார் மேகம் சூழ்ந்து மழைபொழிந்து வெள்ளத்தால் அல்லலுற்றோம். கடல் பொங்கி வந்து ஆழிப்பேரலைக்கு இரையாகிப் போனோம். சுழன்றடித்த புயற்காற்றில் சருகாகிப் பறந்தோம். சிங்களத்தின் குண்டுகள் பட்டு சிறகொடிந்து துடித்தோம். தொற்று நோய்களும் எம்மினத்தை விட்டபாடில்லை. குடல் வற்றிப் பசி தாங்கிக் கிடந்தோம்.

சிங்கள அரசு எமக்கு எதிராகச் செயற்பட்டது. தமிழர் யாரும் உலக அமைப்புகளில் உயர்பொறுப்பில் இல்லை. எனினும், எம்மை நாமே காத்தோம். எமக்கென்று ஒரு தனியரசு எம் தாய்நாட்டில் இருந்தது. தலைவர் மாமா வளர்த்தெடுத்த தமிழீழ மருத்துவத்துறை எம்மினத்தைக் காத்து நின்றது. நாம் பேரிடர்களை எதிர்கொள்ளும் வழிகளை எமக்குச் செய்து தந்தது. அதுபோலவே, கொரோனா நோய்த்தொற்றுப் பேரிடரை, அதற்கான பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி எதிர்கொள்வோம். உரம் பெற்ற நெஞ்சுடன் தமிழர் நாம் மீண்டும் எழுவோம்.

எங்கள் மண்தந்த வலிமையும், எங்கள் வாழ்க்கை முறையும், தலைவர் மாமாவின் வழிகாட்டலும், மாவீரர் ஈகமும் எல்லாப் பேரிடர்களில் இருந்தும் எம்மை மீண்டெழவைக்கும். உறுதிகொண்டு இறுதிவரை இலக்கு நோக்கிப் பயணிப்போம்.

நன்றி,

வணக்கம்.